# ஒரு
# வெ
# உலக

20



JPL
C6991

பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

# இருவேறு உலகம்

கவிதைத் தொகுதி

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

KOHA
JPL

புலவர் ம. பார்வதிநாதசிவம்

155693

155693

வெளியீடு :
"கூடல் அகம்"

மயிலங்கூடல் இளவாலை

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

155693 CC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு
1980 செப்டெம்பர்
விலை ரூபா 5 - 00
அச்சுப்பதிவு
குகன் அச்சகம்
தெல்லிப்பழை
உரிமை ஆசிரியருக்கே.

811.6

**ITU VERU ULAKAM**

AUTHOR
PULAVAR
M.PARVATHINATHASIVAM

FIRST EDITION
SEPTEMBER 1980
**Price Rs. 5 - 00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவசிரோமணி

பிரம்மஸ்ரீ சி. கணேசையரின் மாணாக்கர் ஆகிய

# பண்டிதர் வ. நடராஜா அவர்கள் வழங்கிய

KOHA JPL

# அணிந்துரை

'இருவேறு உலகம்' என்னும் இக்கவிதை நூற்றொகுப்பு ஆசிரியர், புலவர் பார்வதிநாதசிவம் அவர்கள், வித்துவ பரம்பரையைச் சேர்ந்தவர். கவிதையும் உரையும் அவரது பரம்பரைச் சொத்து. பார்வதிநாதசிவத்தின் தந்தையார் மகாலிங்கசிவம், தன்னிகரில்லாத் தனிக்கவிஞர். அவரது கவிதைகளில் அவரது முத்திரை (புதுமை, கற்பனை)கள் மிளிரும். சாகுந்தலச்சுலோகமொன்றைத் தமிழில் தந்த மகாலிங்கசிவம் அவர்கள், வடமொழியில் இல்லாத குற்றுக்கரத்தைப் புகுத்தி "அறுதொடர்க்கண் உகரம் போல் உறுகதூரம்" என்று தமது முத்திரையைப் பதித்த கவித்துவச் சிறப்பு அறிஞர்களுக்கு விருந்தாய் அமைந்திருந்தது.

"குலவித்தை கல்லாமற் பாகம்படும்" என்பதற்கமைய, புலவர் பார்வதிநாதசிவம் அவர்களுக்கும் கவித்துவம் அடிபணிகிறது; அவரது புதுமைக்கு இடம் தருகிறது. புதுமைக் கருத்துக்களும் புத்தணிகளும் நகைச்சுவையும் நயமுமமைந்த தொடர்களும் இக்கவிதைகளுக்குப் புதுமெருகூட்டுகின்றன.

மகாலிங்கசிவம் சக்தி உபாஸகர். அதனைப்போலும் பார்வதிநாதசிவம் அவர்களும் அன்னை பராசக்தியை முதலிலே அழைத்து, "தேவீ, நான் நல்லன விரும்புங்காலை நாடி நீ வெற்றி தா; அல்லன விரும்புங்காலை அன்னையே தோல்வி தா" என்னும் நியாயமான வேண்டுகோளை விடுக்கிறார். மேலும், பெண்மையின் புனிதத்துவம், நாணம் முதலிய பெண்மைக்குணங்களின் இயல்பு, காதலின் மென்மை, தூர்த்தரின்முன் அகப்பட்ட பெண்மை படும்வேதனை, தாலியின் மகத்துவம் முதலிய தலைப்புகளில் பெண்மையைப் பலவிதமாக வருணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலிலே உலகமாதாவை முதலில் வேண்டுதல் செய்து, தமிழை வாழ்த்தி, நாவலர்பெருமானைப் போற்றி, பண்டிதமணியின் பெருமைகளை நினைந்து களிகூர்ந்து, மேல் லௌகீகமான பணம், பசி, வறுமை முதலியவற்றின் செயற்பாடுகளை வருணித்து, செல்வம், அந்தஸ்து ஆகியவற்றின் மிடுக்கையும் புனிதமான காதலின் சிறப்பையும் காதலின் தியாகத்தையும் 'இருவேறு உலகம்' என்னும் குறுங்காவியமாக்கி நிறைவு செய்துள்ளார் ஆசிரியர்.

'வானச் சிரிப்பினை மாரி என்றும், வையச் சிரிப்பினை நெற்காணி என்றும்' கண்டு, ஏனைச் சிரிப்புக்கள் உலகில் நிகழ அந்த இரு சிரிப்பும் வேண்டுமென்றும் அவற்றைப் புத்தாண்டு தரவேண்டும் என்றும் புத்தாண்டை வேண்டுகிறார்.

இந்நூலில் நாவலர்பெருமானை "பொய்யதுவே அல்லால் பிற அனைத்தும் அறிந்திட்ட புகழோன்" என்று கூறும் பகுதி, கம்பர்பெருமான் சீதையையும் இராமனையும், "மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்" என்று கூறும்பகுதியை ஞாபகமூட்டுகிறது,

பண்டிதமணி அவர்களை, "அக்கால இலக்கியங்கள் அனைத்தையுமே ஆய்ந்தறிந்து கற்றதோடே இக்கால இலக்கியத்தும் இனியவற்றை வரவேற்று இரசிக்கும் வள்ளல்" என்று கூறியமை 'முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும்' ஆற்றிய தொண்டை உணர வைக்கிறது.

பிரிவால் ஏங்குங் காதலி,

"ஈசனில்லாக் கோயில் இரக்கமில்லா மானிடர்கள்
வாசமிலாப் பூக்கள் வண்டுலவாப் பூம் பொழில்கள்
பாஷையிலா இனத்தோர் பண்பறியாக் கற்றோர்கள்
நேசனிலாப் பாவை நிலத்திருந்தும் யாது பயன்"

என்று எம்மைப் பார்த்துக் கேட்கவைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், 'பக்தரது தேவையெல்லாம் இறைவனுக்குத் தெரியும்' மனைவியின் தேவை கணவனுக்குத் தெரியும் தான் சொல்ல வேண்டியதில்லை என்பதை ''நாணமே தடை'' என்ற பகுதியிலே தெரிய வைக்கிறார்.

'' கைதிக்கு விலங்கோ கையில்
கயவர்க்குத் துணைவியான
தையற்கு விலங்கு எங்கே ? ''

என்பது நூலாசிரியர் வினா?

' சங்கு நேர் கழுத்தின் கண்ணே ''

என்பது அவர் பதில். அதில் தாலி,

கணவனை விட்டுப்பிரியாமல் தடைசெய்யும் விலங்காகக் கூறப்பட்டமை புதியகருத்து; சிந்திக்கத்தக்கது

'' பக்தனுடன் அர்ச்சனைக்கும் நீயே செல்வாய்
பரத்தையிடம் வாலிபனை அழைத்துச் செல்வாய்
மெத்த நல்ல வைத்தியனை அடைந்து கொள்ள
மேதினியில் ஏழைகட்குத் தடையாய் நிற்பாய் ''

''இல்லாத பலபேர்க்குப் பசியைச் சேர்ப்பாய்
இருந்துகொண்டே செமியாத நிலையைச் சேர்ப்பாய்
பொல்லாத பணமென்னும் அழகுப்பாவாய்
புவியிடையே நீ செய்யும் குறும்பு கோடி ''

என்று உலகை ஆட்டிப் படைக்கும் பணத்தின் இயல்பைக் கூறி

''நானும் உன்தன் காதலினை நாடிநாடி
நாளெல்லாம் அலைந்திட்டேன் நீயோ என்னை
ஏனென்றும் கேட்கவில்லை விதி இல்லாமல்
எமக்கு மணம் நிகழ்வதற்கும் நீதி உண்டோ ''

தன் மன வேட்கையையும்கூறி, அது நிகழாத காரணத்தையும் தெரியவைக்கிறார். இவ்வாறு இனியபல விடயங்களை அழகிய நடையில் சுவை ததும்பப் பாடித் தந்த புலவர் பார்வதிநாதசிவத்தின் தமிழ் நா மேலும் செழுமை பெற்று வாழ்வதாக.

குரும்பசிட்டி,
4-9-80.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைந்துரை

795 புறப்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலை நோக்கி நகர ஆரம்பித்துவிட்ட அந்த பஸ் வண்டியில் கடைசி நிமிஷத்தில் அவசர அவசரமாக ஒருவர் ஓடி ஏறுகிறார்.

'768 இல் இருந்தேன். உன் தலை தெரிந்தது; ஓடி வந்து விட்டேன்' - சிரித்தபடி எனக்கு அருகில் அமர்கிறார் அவர். சம்பாஷணை மெல்லக் கவிதை பற்றித் திரும்புகிறது.

உரையாடலின் நடுவே, அப்போது கவிதை வானில் சுடர்விடத் தொடங்கியிருந்த மூன்று தாரகைகள் பற்றிக் குறிப்பிடுகிறார்; குதூகலிக்கிறார்; 'இவர்கள்என் எதிர்கால எதிர்பார்ப்புக்கள்' என்கிறார்.

'' ஒரு கவிஞரிடம் என்னையும் ரகுநாதனையும் அறிமுகப்படுத்தும்போது ' இரண்டுபேரும் என் எதிர் கால நம்பிக்கைகள் ' என்றார் '' புதுமைப்பித்தன் என எங்கோ அழகிரிசாமி எழுதியிருந்ததை அவருக்கு நான் நினைவுபடுத்துகிறேன்.

அன்று **மஹாகவி** என்னிடம் குறிப்பிட்ட கவிஞர் மூவரில் ஒருவர் **புலவர்** பார்வதிநாதசிவம். இன்று புலவரின் இரண்டாவது கவிதைத் தொகுதியைப் புரட்டும்போது இந்த நினைவுகள் எல்லாம் எழுகின்றன. கூடவே அன்று மஹாகவி அவரிடம் வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை என்ற மகிழ்வும் பிறக்கிறது.

**காதலும் கருணையும்** வெளிவந்து எட்டாண்டுகளின் பின் **இருவேறு உலகம்** வெளிவருகிறது. இந்த இடைக் காலத்தில், கவிதைப் பயிர் விளைத்துப் புலவர் திரட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிய கவிதை மணிகளில் இருபது உதிரிக் கவிதைகளும் ஒரு குறுங்காவியமும் இத்தொகுப்பில் இடம்பெறு கின்றன. இந்த இரண்டாம் தொகுதியிலும் புலவர் அவர்களின் தனித்துவம், ஆளுமை என்பன சிறப் பாக மிளிரவே செய்கின்றன.

'' அன்புதனிற் **கண்ணப்பர்** அஞ்சாமை
தனில் **அப்பர்** அருளுகின்ற
பண்புதனில் **சம்பந்தர்** பரனடியார்க்(கு)
**அப்பூதி அடிகள்** ஆவாய்
எண்குணத்தோன் பெருமையினை இகழ்வார் முன்
**விறன்மிண்டர்** இயல்பு கொள்வாய்......''

என, பெரியபுராண வசனம் தந்த நாவலருக்கு அப் பெரியபுராணப் பாத்திரங்களான சிவனடியார்களையே உதாரணமாக்கிய சிறப்பின் பொருத்தமும் நுட்பமும் மனசை அள்ளுகின்றன.

பாணுக்குக் கியூவிலே நின்ற ஏழைப் பெண் ஒருத்தி பசிமயக்கத்தால் ரோட்டுக் கானுக்குள் விழுந்து விட் டாள். மருத்துவ மனையில் நினைவு மீண்டதும் 'பாண்' என்று பதறுகிருள். அருகில் நின்றோர் அல்லல் எத் தனையோ உற்றுப் பாண் கொணர்ந்து விட்டனர். அந் தப்பெண் 'ஆ வென்ருள் பாணதனை அணைத்துக்கொண் டாள்'. அவ்வளவு தான்,

'செல்லலுற்ற தவள்ஆவி ஆமாம் பாணைச்
செத்தபின்னும் அவள்கைகள் விடவே இல்லை'.

'தனியொருவனுக்கு உணவிலையெனில் ஜகத் தினை அழித்திடுவோம்' எனப் பாரதியாகவோ அல் லது 'கொலை வாளினை எடடா!' எனப் பாரதிதாஸ ஞகவோ நின்று கர்ஜிக்கப் புலவருக்குத் தெரியாது, ஆனல் நாஸுக்காக - வாழைப்பழத்தில் ஊசி ஏற்று வது போல - உள்ளத்தில் தைக்கும்படி உண்மைகளை வலியுறுத்துவதில் இவர் சமர்த்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்க்கை சிறியதொரு போர்வை. ஒருவன் புரண்டு படுக்கும்போது மற்றொருவன் தன்னை மூடப் போதியளவு இல்லாமையால் திண்டாடுகிறான்" என்றான் வியட்நாமியச் சிறுகதை மன்னன் நாட்ஹோா. போர்வை என்ற புலவரின் கவிதை இதை மற்றொரு கோணத்தில் காண்கிறது; காட்டுகிறது.

புலவரின் நகைச்சுவை கூடத் தனித்தன்மை வாய்ந்தது. ஆர்ப்பாட்டமோ அட்டகாசமோ பண்ணித் துருத்திக் கொண்டு நிற்பதாக அது அமைவதில்லை. எடுத்துக்கொண்ட பொருளோடு இயைந்து மெல்லநகும்படி செய்வதாகவே அதுஅமைந்திருக்கும்,

**மாலைத்தேடி** அலுத்தவர்
'நீவர வில்லை என்ற
நித்தியத் துயரத் தாலே
நாவினைக் கவரும் பாணும்
நாலவுன்ஸ் மெலியக் கண்டேன்'

என்று புலம்பும் போதும்,

**மதுவினில்** முழுகி எழுந்த **ஒருவர்,**
"......தெருவினிற் சென்ற
பொற்றொடி மீது மோதியே அயலுள
கற்றூண் ஒன்றிடம் மன்னிப்புக் கேட்கையிலும்

**பணம் எனும் பாவை**யை நோக்கி,
"உனைப் பிறர்பால் ஒப்படைக்க விரும்பாக்கஞ்சர்
உபாயங்கள் பல கொள்வார்"
என்று கூறி அவ்வுபாயங்களை அடுக்கிக் கூறும்போதும் புலவரின் 'பொருள்சேர்' நகைச்சுவையைச் சுவைக்க முடிகிறது.

**அஞ்சுகம் துணிந்து விட்டாள், இல்லக விளக்கு** என்பவை பெண்ணடிமைத் தளை நீக்கம் பற்றி எண்ணத் தூண்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏழையர் செல்வர் எனும் இருபிரிவில் இருவேறு லகம்' இருப்பதையும், 'பாட்டுவக்கும் பண்பமைந்த பகரரிய உழைப்பாளி',

'நாட்டினது நலனுக்காய் உழைத்தும் இந்த
நாட்டினர்க்குத் தெரியாத ஒருவனுகி'

உழல்வதையும், உணர்த்துவதாய் அமைந்த **இருவேறு உலகம்** என்ற காதல் காவியம்,

'காதல் உணர்வினூடே சமூகத்தில் வறுமையால் வாடும் ஏழைகளின் பிரச்சினையையும் நோக்குகிறவர்புலவர்' என்ற ஆ. சிவநேசச்செல்வனின்கூற்றை நிதரிசனமாக்கக் காண்கிறேம்.

'தமிழை வளர்த்த மரபினிலோர் சான்றேன்
அமிழ்தம் அனையகுணத் தன்பன்—தமிழென்று
இலேகூளம் வைக்கோல் இவைவிற்கும் இன்று
கலைவிருந்து வைத்தான் கவி'.

எனக் கவிஞர் **நீலாவணன்** புலவரது முதலாவது கவிதைத் தொகுதி பற்றிச்சொன்னது 'உண்மை: வெறும் புகழ்ச்சியில்லை' என்பதை இந்த இரண்டாவது தொகுதியும் நிரூபிக்கிறது.

விழிசிட்டி,
1980 - 09 - 09.

க. உமாமகேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இத்தொகுப்பில் இடம்பெறும் தனிக் கவிதைகள் அனைத்தும் வீரகேசரி தினகரன் ஈழநாடு பத்திரிகைகளின் வாரமலர்களில் வெளிவந்தவை.

குறுங்காவியத்தின் சில பகுதிகள் கலைக்கண் திங்கள் இதழில் வெளிவந்தவை. இவற்றைப் பிரசுரித்த பத்திரிகை ஆசிரியர்களுக்கு எனது நன்றி.

மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையரின் மாணாக்கரும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் எழுத்தாளராகப் பணிபுரிந்தவரும் சிறந்த தமிழறிஞரும், சிந்தனையாளருமாகிய பண்டிதர் வ. நடராஜா அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியமைக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது மதிப்புக்குரிய நண்பர் திரு. க. உமாமகேஸ்வரன், சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை அனைத்தையுஞ் சுவைத்துப் படிப்பவர்; மேடைகளில் சுவைபடப் பேசுபவர். இந்நூலுக்கு புனைந்துரை வழங்குமாறு கேட்டபோது ஒப்புக்கொண்டு வழங்கியுள்ளார். அவருக்கு எனது நன்றி.

சிறந்த முறையில் அச்சிட்ட தெல்லிப்பழை குகன் அச்சகத்தினர்க்கும், அட்டைக்கான ஓவியத்தை அழகுற வரைந்த ஓவியக் கலைஞர் ரமணி அவர்களுக்கும், புளொக்கினைச் சிறப்பாகத் தயாரித்த கொழும்பு ஸ்ரூடியோவினருக்கும் எனது நன்றி.

மயிலங்கூடல், ம. பார்வதிநாதசிவம்
இளவாலை.
**1980 - 09 - 14.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

# நன்றி

இந்நூல் வெளிவருவதற்குப் பொருள் உதவி புரிந்து தமது பெயரை நூலிற் குறிப்பிட வேண்டாம் என்று அன்புடன் பணித்த புகழ்வேண்டா வள்ளலுக்கு நான் ஆற்றும் கைம்மாறும் உண்டோ ?

'கைம்மாறு வேண்டா
கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ
உலகு.'

— திருக்குறள் 22 : 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே . . . . .


| | பக்கம் |
|---|---|
| அன்னைக்கு விண்ணப்பம் | 13 |
| வாழ்க தமிழ் | 15 |
| வருக புத்தாண்டே | 17 |
| நாவலர் பெருமான் | 18 |
| பண்டிதமணியே வாழி | 21 |
| குளிர் | 24 |
| மதுவினில் ஒருவர் | 25 |
| வாராரோ அன்பர் | 26 |
| நாணமே தடை | 28 |
| பணம் எனும் பாவை | 31 |
| குறும்பாய் நகைத்தான்... | 34 |
| அஞ்சுகம் துணிந்துவிட்டாள் | 36 |
| இல்லக விளக்கு | 38 |
| எங்கே அவர் ? | 40 |
| இருவேறுலகம் ( காவியம் ) | 42 |
| தேன் சிந்தும் செம்மலர்கள் | 60 |
| எழுத்துக்கு மறுநாள் | 62 |
| மின்சார வெட்டும்...... | 64 |
| பாணும் பாவையும் | 66 |
| மாவைத் தேடி | 68 |
| அதிபரின் மோட்டார் | 70 |
| அரிசியும் சந்நியாசியும் | 72 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## அன்னைக்கு விண்ணப்பம்

நிலையிலா உலகம் தன்னை
    நிலையதாம் பொருளென் றெண்ணி
அலையுமோர் மனத்தி னேற்கும்
    அருள்செயும் தேவீநல்ல
கலைகளாம் ஆறு யாவும்
    கலந்திடும் கடலே அம்மா
நலமிலா நினைவை உள்ளம்
    நண்ணுமேல் தடுத்தல் கேட்டேன்.

நல்லன எனக்கும் செய்யும்
    ஞானமோ சிறிதும் இல்லேன்
அல்லன விரும்புங் காலை
    அன்னையே! தோல்வி தாராய்
நல்லன விரும்புங் காலை
    நாடிநீ வெற்றி தாராய்
தொல்லைசெய் வினையைக் கண்டே
    துணுக்குற்றேன் நடுக்கம் தீர்ப்பாய்



699100 155693
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னேக்கின் படிபன் ளுளும்
ஏகியே அடிகள் பட்டே
நின்னேக்கின் படிவாழ் தல்தான்
நிலேத்ததாம் இன்பம் என்ற
நன்நோக்கை இன்றே பெற்றேன்
நன்குள சின்னு ளேனும்
நின்நோக்கின் படியே வாழும்
நீதிசேர் மனம்தா ராயோ. ?

கங்கைநீர் இருப்பச் சேற்றுக்
கயத்திலே குளித்தல் செய்தேன்
பங்கயம் இருப்ப நானே
பட்டிப்பூப் பறித்தல் செய்தேன்
தங்கமோ இருப்பப் போலித்
தகட்டினைத் தலைமேல் வைத்தேன்
இங்குயான் உய்தற் கேற்ற
எண்ணமே அருள்வாய் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க தமிழ்

கனிமொழியே தனிமொழியே
கவின்மொழியே வாழ்க
கற்பனையே அற்புதமே
பொற்புருவே வாழ்க
பனிமலரே எனதுயிரே
நனிசுவையே வாழ்க
பானிலவே வானமுதே
தேனனையாய் வாழ்க.

இயலென்றே நீவளர்ந்தாய்
இவ்வுலகோர் மகிழ்ந்தார்
இசையென்றே நீ செழித்தாய்
இவ்வுலகோர் நெகிழ்ந்தார்
நயமெல்லாம் மிகக்கொண்ட
நாடகமாய் எழுந்தாய்
நாட்டினரும் உலகினரும்
நாடிநிதம் உயர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்பொருளாய்ப் புறப்பொருளாய்
அரும்பொருளாய் வாழ்க
அகத்தியனால் காப்பியனால்
வளர்ந்தனைநீ வாழ்க
மிகப்பலவாய் இகப்புகழாய்
விளங்கிடுவாய் வாழ்க
மென்மொழியே செந்தமிழே
என்னுயிரே வாழ்க.

பாட்டாக முன்நடந்தாய்
உலகநிலை கண்டாய்
பாரினிலே உரைநடையாம்
புதுநடையும் கொண்டாய்
காட்டாறு போல்நீயோ
காலமெல்லாம் விரைந்தாய்
கட்டழகு குன்றாத
மேனியினாய் வாழ்க.

கவிதைஎனப் புலவோர்கள்
உனைவியந்தே நிற்பார்
கதையென்றும் நவலென்றும்
பலர்கூடி நயப்பார்
புவிபோற்றும் புகழ்படைத்தாய்
பூங்கொடியே வாழ்க
புதுமொழியே மதுமொழியே
பழமொழியே வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருக புத்தாண்டே

செங்கதிர் வந்தது வானத்திலே — இருள்
சென்று மறைந்தஇந் நேரத்திலே
எங்களை வாழ்விக்க வந்தனையே — உனை
ஏத்தினம் ஏத்தினம் புத்தாண்டே,

வெம்பும் நிலையினை நீக்கிடுவாய் — எங்கள்
வேதனை யாவையும் நீக்கிடுவாய்
நம்பிக் கைஎன்ற கரம்குவித்தே — உன்னை
நாடி அழைத்தனம் புத்தாண்டே.

வானச் சிரிப்பினை மாரிஎன்போம் — இந்த
வையச் சிரிப்பைநெற் காணிஎன்போம்
ஏனைச் சிரிப்புச் சிரிப்பதற்கே — இந்த
இரண்டு சிரிப்பையும் நீதருவாய்.

பஞ்சத்தைப் போக்கிடு புத்தாண்டே — எங்கள்
பாரத்தை நீக்கிடு புத்தாண்டே
நெஞ்சம் எனும்எழில் வாவியிலே — இன்ப
நீரினைத் தேக்கிடு புத்தாண்டே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் பெருமான்

பண்பென்னும் குன்றுதனிற் படர்ந்திட்ட
கொடிஎன்கோ பாரோர்க் கெல்லாம்
அன்பென்னும் கனிகளினை ஆர்வமுடன்
அளிவிருட்சம் அவைதாம் என்கோ
துன்பென்னும் இருள்நீக்கிக் கலாசாரம்
காத்ததுவாம் சுடர்தான் என்கோ
என்பும்தான் தமிழ்சைவம் காக்கவென
அளித்திட்டாய் எதையான் சொல்வேன்

அன்புதனிற் கண்ணப்பர் அஞ்சாமை
தனில்அப்பர் அருளு கின்ற
பண்புதனிற் சம்பந்தர் பரனடியார்க்
கப்பூதி அடிகள் ஆவாய்
எண்குணத்தோன் பெருமையின் இகழ்வார்முன்
விறன்மிண்டர் இயல்பு கொள்வாய்
மண்ணகத்தே உடம்பினையும் வானகத்தே
மனத்தினையும் வைத்தோய் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைதனில் நின்றாடும் சிவனாரின்
திருவடியே சேர்ந்த நெஞ்சும்
பல்லிடத்தும் பரந்துவளர் பழமைமிகு
சைவமதைப் பகரும் நாவும்
சொல்லிலுயர் தமிழ்ச்சொல்லின் தூய்மை
காப்பதுவாம் எழுதும் கோலும் [யினைக்
நல்லைநகர் வந்துதித்த கோமானே
நின்சொந்தம் தொழுவோம் நாமே.

செய்யுளெனும் ஆறாகிச் சென்றுபொருள்
விளைத்ததமிழ்த் தெய்வ மாது
வையமதில் உரைநடையாம் புத்தாறாய்ப்
புதுவேகம் கொண்டே பாய
ஐயநின்றன் பணியேதான் காரணமென்
றறிஞரெலாம் இயம்பக் கேட்டோம்
பொய்யதுவே அல்லாமற் பிறவனைத்தும்
அறிந்திட்ட புகழோய் வாழி.

தமிழ்மாதின் தவப்பயனே சைவத்தின்
உயிர்மூச்சே சான்றோர்க் கெல்லாம்
அமிழ்தாக இனிப்பவனே ஆறுமுக
நாவலனே அரன்பா தத்தைத்
தமதாய சொத்தெனவே முப்போதும்
தொழுகின்ற சைவர்க் கெல்லாம்
அமைவான நெறியிதென ஆகமத்தால்
வேதத்தால் அளித்தாய் வாழ்க.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மமெனும் நெறிவந்த பொருளினையே
பொருளென்று தரைமேற் கொண்டாய்
தர்மமெனும் நெறிதந்த வெற்றியையே
வெற்றியெனச் சகத்தே கொண்டாய்
தர்மமெனும் விழிகொண்டே இவ்வுலகை
நோக்குகின்ற சால்பின் மிக்காய்
தர்மமெனும் பாதையினில் தவருமல்
காலமெலாம் நடந்தாய் வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

# பண்டிதமாமணியே
# நீ
# வாழி வாழி

ஒழுக்கமெனும் விழுப்பமதால் உயர்ந்தனை நீ
எனச்சிலரும் உளத்தே தோன்றும்
அழுக்ககற்றிக் கொண்டமையால் உயர்ந்தனை நீ
எனச்சிலரும் அறிவென் கின்ற
முழுப்பொருளைப் பெற்றமையால் உயர்ந்தனை நீ
எனச்சிலரும் மொழிவா ரேனும்
பழுத்ததமிழ்ப் புலமையினுய் நின்சிறப்பை
அளந்தறிந்து பகர்ந்தார் இல்லை.

சமயமெனும் பெருங்கடலுள் மூழ்கிஉளம்
அமைதிகொளும் சால்பின் மிக்காய்
அமையுமுயர் இலக்கியமாம் அமுதுதனை
உண்கின்ற அறிவுத் தேவ
நமதினிய நாட்டினுக்கும் மொழியினுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்விளைக்கும் நலன்கள் வாய்ந்தாய்
இமயமதாய் சாகரமாய் இரும்புலவர்
தொழவிளங்கும் இயல்பின் மிக்காய்

அக்கால இலக்கியங்கள் அனைத்தையுமே
ஆய்ந்தாய்ந்து கற்ற தோடே
இக்கால இலக்கியத்தும் இனியவற்றை
வரவேற்றே ரசிக்கும் வள்ளால்
எக்கால வல்லுநரும் ஏற்றிடவே
உண்மைமணி இனிதின் ஈவாய்
தக்கோர்கள் தொழும்மணியாம் பண்டிதமா
மணியேநீ வாழி வாழி.

வேறு

ஈழத்தின் தவப்பயனே தமிழாம் மாதின்
எழில்காண விழிக்குதவும் எழிலோன்
போல்வாய்
ஏழிசையாய் விளங்குகின்ற இறைவன் பாதம்
எப்போதும் தியானிக்கும் பேறு பெற்ருய்
நாளெல்லாம் ஆண்டவனின் நோக்கம் தன்னை
நாடிவரும் அன்பருக்கே விளக்கும் நல்லாய்
வாழியநீ அவனருளால் தமிழ்சை வத்தை
வளர்க்கவெனப் புவித்தலத்தே வந்த பண்பா

சங்கநூற் பரவைதனிற் கபிலன் பாட்டாம்
தனிமுத்தின் ஒளிச்சிறப்பை நின்றன் நாவால்
இங்குநாம் கேட்டிடத்தான் செவிபெற் றேமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையெனிற் கம்பனெனும் கவிவல் லோனின்
தங்கநிகர் காப்பியத்தின் கருத்தும் தேனும்
கற்பனையும் கலந்ததனி அமுதப் பேச்சை
இங்குன்பாற் கேட்டிடத்தான் செவிபெற்
றோமா
இன்னுமே நாமதனை அறிந்தோம் இல்லை

கந்தவேள் புராணத்தின் கலாசா ரத்தைக்
கனியாக நாமெல்லாம் உய்யத் தந்தாய்
பந்தமதை அகற்றிஇறை பாதம் சேர்க்கும்
பயனுயகட் டுரைகள் பலவுந் தந்தாய்
சிந்தனைக்குப் பெருவிருந்தாய்க் கற்றோர்
போற்றும்
சிறப்புறுசை வத்தின்சிந் தனைநூல் தந்தாய்
இந்தவையம் உள்ளவரை நின்னுக் கங்கள்
இருக்குமென நாம்அறிந்தோம் மணியே வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்

நீள்நகர் வீதியில் ஓர்கடை வாயிலில்
ஏழைமை என்ற வான்பகை வருத்திடக்
கொல்லும் மார்கழிக் குளிர்மிக வாட்டிட
அன்னை ஒருத்தி தரையினிற் கிடந்தாள்
அன்னவள் பெற்ற அதிட்டமில் சேயோ
போர்வையோ சட்டையோ அற்றதாம்
நிலையில்
மார்புடன் சேர்ந்தே பாலிலா முலையினைச்
சுவைத்த வாறே நடுங்கிக் கிடந்தது
சற்றவர்க் கயலிற் கிடந்ததோர் நாயிற்
குட்டிகள் பாலைக் குடித்துக் கிடந்தன
நாய்க்கோ இறைவன் குளிரைப் போக்க
உடலெலாம் மயிரெனும் போர்வையை
அளித்தனன்
தாய்க்கும் சேய்க்கும் எவ்வகைப் போர்வையும்
ஈந்திட ஈசன் மறந்தனன் ஏனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# மதுவினில் ஒருவர்

போத்தல் ஒன்றைக் கையினில் ஏந்தியும்
போவோர்க் கொவ்வொரு சொட்டையே
கூறியும்
குடும்பப் புகழைத் தெருவினில் சிதறியும்
அறிவைப் போலவே கண்ணையும் மதுவெறி
முற்றாய் மறைத்திடத் தெருவினிற் சென்ற
பொற்றொடி மீது மோதியே அயலுள
கற்றூண் ஒன்றிடம் மன்னிப்புக் கேட்டும்
அழகிய வாயினை இழிவுறக் கோணியும்
மழலையில் மேலும் வார்த்தைகள் கூறியும்
சந்தி சிரிக்கும் வண்ணம் மதுவினிற்
புந்தியை வைத்தவர் போகின் றார் அதோ
கந்தையை உடுக்கும் மனைவியை நினையார்
கஞ்சியே குடிக்கும் மக்களை நினையார்
அவர்தம் வளர்ச்சி கல்வி திருமணம்
என்பன பற்றி ஏதுமே நினையார்
ஓர்குடி செய்த பாவம் ஈதென
ஓர்குடி காரர் போகின் றார் அதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராரோ அன்பர்

வாராரோ அன்பரிவண்
வந்தினிய தோள்பற்றித்
தாராரோ முத்தங்கள்
தந்துள்ளத் தாசையெல்லாம்
தீராரோ பெண்மையது
பொலிந்து சிறந்திருத்தல்
பாராரோ என்றென்றே
பாவையுள்ளம் ஏங்கிடுமால்.

ஆற்றைக் கடல் அணைக்கும்
அருமதியை வான் அணைக்கும்
ஊற்றை நதி அணைக்கும்
ஓவியத்தைச் சுவர் அணைக்கும்
நாற்றை வயல் அணைக்கும்
நன்மலரை வண்டணைக்கும்
கோற்றெடியாள் மார்பகத்தைக்
கொழுநனலால் யாரணைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மொழியாலும்
　　அணைத்திடுமோர் சுகத்தாலும்
முன்பு தெரியாத
　　முழுச்சுகத்தைக் காட்டிவிட்டுப்
பின்பு பிரிவானல்
　　பேதையவள் என்செய்வாள்
அன்பின் வழிவந்தோர்
　　அல்லல்செயின் ஆர்கேட்பார்.

ஈசனிலாக் கோயில்
　　இரக்கமிலா மானிடர்கள்
வாசமிலாப் பூக்கள்
　　வண்டுலவாப் பூம்பொழில்கள்
பாஷையிலா இனத்தோர்
　　பண்பறியாக் கற்ருேர்கள்
நேசனிலாப் பாவை
　　நிலத்திருந்தும் யாதுபயன் ?

போரின் பயன் அறிந்தே
　　பொங்கிக் குதித்திடுமோர்
வீரன் கரவாளும்
　　வித்தைகற்போர் தம்மனமும்
ஆரும் உயிர்க்குலத்தின்
　　அரும்பசிக்கி வோர்கரமும்
மாரன் கணைப்படுமோர்
　　மனமுமென்றும் ஓய்வதுண்டோ ?



6991 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணமே தடை

பொங்கியெழும் வாத்தியமும்
பண்பு கொண்டோர்
புகழ்ந்துரைத்த நல்வாழ்த்தும்
ஒலிக்கும் வேளை
மங்கலநாண் பூட்டியஎன்
கணவர் தேன்சேர்
மலர்துயிலும் கட்டிலினைச்
சுட்டிக் காட்டி
"இங்கிதுவேன் எனக்குறும்பாய்க்
கேட்டார்" அன்பர்
இவ்வுலகை மறப்பதற்கென்
றுரைப்போ மென்றே
அங்குநினைத் தேன்ஆயின்
நாணம் என்பாள்
அதன்முன்னே என்நாவைத்
தடுத்து விட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லஎனை அணைத்துப்போய்ப்
படுக்கை மீது
மேவரிய தோழியர்கள்
பரப்பி வைத்த
எல்லமைந்த மலரையெல்லாம்
சிதறச் செய்தே
எண்ணற்ற முத்தங்கள்
அளித்த போது
நல்லதல்ல ஒருவர்மட்டும்
கொடுத்தல் ஒன்றை
நானும்தான் கொடுப்போமென்
றெண்ணும் போது
நில்லென்று தடுத்திட்டாள்
முன்னர்ப் போல
நிலைமைசற்றும் அறியாத
நாணம் என்பாள்.

செங்கதலித் தண்டிருப்ப
மென்மை முற்றும்
சேர்ந்திருக்கும் வேயிருப்ப
மயங்கும் வண்டோ
அங்கயத்தில் தாமரையின்
அரும்பை மட்டும்
அடுத்தடுத்துச் சுவைக்கிறதே
அவைகட் காக
இங்கெவரும் பேசுதற்கும்
இலையோ என்றே



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதவரைக் கேட்பதற்கு
முயன்றேன் ஆயின்
அங்குமெனே நாணமெனும்
பாவி நோக்கி
அமைதிதான் பெண்மைஎன்றே
தடுத்துவிட்டாள்.

என்மொழிக்கும் செயல்களுக்கும்
வார்த்தை இன்றி
இன்னகையை மட்டும்நீ
அளிக்கின் ருயே
அன்பருடன் பேசுதலும்
தவருே என்றே
அவர்கேட்டார் அவ்வேளை
அவரை நோக்கி
என்னஇது பக்தரது
தேவை யெல்லாம்
இறைவனுக்குத் தெரியுமெனச்
சொல நினைத்தேன்
அந்நிலையி லேயும்தான்
நாணம் என்பாள்
அமைதிதான் அணிஎன்றே
தடுத்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணம் எனும் பாவை

இளையோரும் காதலிப்பார்
முதியோர் தாமும்
ஏங்கிடுவார் நின்னுடைய
காதற் காக
வளையோரும் நின்னுடனே
அணைந்து நிற்கும்
மாப்பிளைக்கே துணையாக
விரும்பு வார்கள்

உனைப்பிறர்பால் ஒப்படைக்க
விரும்பாக் கஞ்சர்
உபாயங்கள் பலகொள்வார்
ஒன்று நூறு
மனைவிளக்குக் கொளுத்திவிட்டோம்
தாரோம் என்பார்
மாதாவின் திவசம்இன்று
தாரோம் என்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவெள்ளிக் கிழமைஅதால்
தாரோம் என்பார்
எழில்மாதப் பிறப்பின்று
தாரோம் என்பார்
துன்றுவியா ழன்இன்று
தாரோம் என்பார்
சொல்லியது பல்லிபெட்டி
திறவோம் என்பார்.

இருப்போரும் கடன்கேட்போர்
தம்மைப் பார்த்தே
"இல்லை"யென்று நீஇருப்பப்
பொய்யே சொல்வார்
வரப்போகும் புதன்தருவேன்
என்று கூறி
வாங்கியவர் பலபுதன்கள்
பொய்யே சொல்வார்.

பக்தனுடன் அர்ச்சனைக்கும்
நீயே செல்வாய்
பரத்தையிடம் வாலிபனை
அழைத்துச் செல்வாய்
மெத்தநல்ல வைத்தியனை
அடைந்து கொள்ள
மேதினியில் ஏழைகட்குத்
தடையாய் நிற்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியினால் உனைச்சிலபேர்
பெறநினைப்பார்
கருணையினால் உனைச்சிலபேர்
பெறநினைப்பார்
புத்தியினால் உனைச்சிலபேர்
பெறநினைப்பார்
புவியிலுனைப் பெறமுயற்சி
செய்யார் யாரே?

இல்லாத பலபேர்க்குப்
பசியைச் சேர்ப்பாய்
இருந்துகொண்டே செமியாத
நிலையைச் சேர்ப்பாய்
பொல்லாத பணம்என்னும்
அழகுப் பாவாய்
புவியிடையே நீசெய்யும்
குறும்பு கோடி.

நானுமுன்றன் காதலினை
நாடி நாடி
நாளெல்லாம் அலைந்திட்டேன்
நீயோ என்னை
ஏனென்றும் கேட்கவில்லை
விதிஇல் லாமல்
எமக்குமணம் நிகழ்வதற்கும்
நீதி உண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்பாய்
# நகைத்தான்
# அவன் வாழி

குன்றிற் பிறந்தே வெள்ளருவி
    குதித்துக் குதித்தே கீழ்ஓட
நின்றங் கதனை நான்நோக்கி
    நிலத்தே மகிழ்ந்தேன் என்தோழி
நின்றங் கதனை நான்நோக்கி
    நிலத்தே மகிழ அன்னவனே
கொன்றே விடுவான் போல்நோக்கிக்
    குறும்பாய் நகைத்தான் அவன்வாழி.

சோலை மலரில் வண்டொன்று
    தேனை அருந்தி மதுவெறியில்
சால அதன்மேல் துயில்வதினைத்
    தரைமேற் பார்த்து நான்நின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சால அதன்மேல் துயில்வதினைத்
துரைமேற் பார்த்து நான்நிற்பக்
கோல மயிலே வாவென்று
குறும்பாய் நகைத்தான் அவன்வாழி.

கிள்ளை இரண்டோ ஆவலினால்
கீச்கீச் என்றே ஒலிஎழுப்பிக்
கொள்ளை இன்பம் காணுமொரு
கோலம் நோக்கி நான்நின்றேன்
கொள்ளை இன்பம் காணுமொரு
கோலம் நோக்கி நான்நிற்ப
அள்ளி அணைப்பான் போல்வந்தே
அன்பே என்றான் அவன்வாழி,

வானில் மதியம் தோன்றிடுங்கால்
வையம் யாவும் கோலமுறும்
தேனும் காட்சி தனைநோக்கிச்
சிறியேன் அங்கே நின்றிட்டேன்
தேனும் காட்சி தனைநோக்கிச்
சிறியேன் நிற்கும் வேளையிலே
தானே வந்தென் கரம்பற்றித்
துரைமேல் மகிழ்ந்தான் வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சுகம் துணிந்து விட்டாள்

'கொஞ்சிடும் கிள்ளை' என்றான் — எழில்
'கூடியதாம் புதுப்பொய்கை' என்றான்
'நெஞ்சகக் கனவனைத்தும் — வந்து
நேரினில் நின்றதோர் வடிவம்' என்றான்
'பஞ்சினும் மென்மையதே — அன்புப்
பாவையே நின்னுடல்' என்றுரைத்தான்
'அஞ்சுகமே உயிர்நீ — அதைத்
தாங்கிட உள்ளதென் உடல்' மென்றான்.

'பருகிட அமுத' மென்றான் அந்தப்
பாவையும் மணத்தின்பின் கிடைக்கு மென்றாள்
'உருகுதென் உள்ள மென்றான் — அந்த
உள்ளத்தைக் குளிர்விப்பேன் பின்னர்' என்றாள்
'பெருகுதென் ஆவ'லென்றான் — மெல்லப்
பெருகிடும் ஆவலை வெல்லுமென்றாள்
'மருவிடல் வேண்டும்' என்றான் — அவள்
,மணத்தின் பின் ! மணத்தின் பின்!
என உரைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

ஒருபகல் ஓடிவந்தான் — 'தந்தை
உணர்ந்திலர் காதலின் பெருமை' என்றான்
'பெருநிதி படைத்தவளை — அந்தோ
பேசிவிட்டார் மணம்' என்று சொன்னான்
'சரியெனை மறந்திடென்றான் — அவள்
தாள்களில் வீழ்ந்திடல் செய்திலளால்
நரியென நிற்பவனே — ஆண்கள்
நாணிடப் பிறந்தனை செல்க' வென்றாள்.

கள்ளரில் இழிந்தவனே — உன்றன்
கயமையை என்னுடன் நிறுத்திடுவாய்
எள்ளுதற் குரியவனே — அப்பால்
ஏகிடு வாயெனச் சினந்துரைத்தாள்
உள்ளத்தைப் பறிகொடுத்தும் — அவள்
உடலினைக் கொடுத்திடத் தவறியதால்
தெள்ளிய நீரெனவே — நல்ல
சீரிய வாழ்வினை நாடிநின்றாள்.

699100



155693

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லக விளக்கு

இல்லக விளக்குப் போல்வார்
இனியநல் அமுதை ஒப்பார்
சொல்லினிற் கவர்ச்சி கொண்டார்
தோற்றத்தில் மலரை நேர்வார்
கல்லையும் உருக்கும் சக்திக்
கண்களைத் தமதாய்க் கொண்டார்
பல்லென முத்தைக் கொண்டார்
பாவையர் சிறப்பும் ஒன்றே.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த
எழிலுறு மாதர் தம்முள்
எத்துணை மாதர் இல்லில்
இன்பமாய் வாழ்கின் றார்கள்
மெத்தவும் இனிய தென்றே
மேவிடும் இல்ல றம்தான்
சித்திர வதையே என்று
தேர்கிறார் மணத்தின் பின்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்துப் பின்வீடு வந்தே
கொண்டுவா உணவை என்றே
அடித்துப்பேய் போலக் கத்தும்
ஆடவர் பலபேர் உள்ளார்
அடுப்படி அதற்கும் பள்ளி
அறையெனும் அதற்கும் அன்றி
அடுத்த வீட்டினிற்கும் செல்ல
அனுமதி வழங்கல் செய்யார்

கைதிக்கு விலங்கோ கையில்
கயவர்க்குத் துணைவி யான
தையற்கு விலங்கு எங்கே ?
சங்குநேர் கழுத்தின் கண்ணே
ஐயஇல் லறத்தைப் பற்றி
அளவில்கற் பனைகள் செய்து
தெய்வநேர் பெண்ணிற் பல்லோர்
செகத்தினில் துடிக்கின் றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே அவர்?

ஈட்டுதல் கருதி நானும்
　　ஈன்றதாய் நாட்டை விட்டே
சேட்புலம் சென்ற பின்னர்த்
　　திரும்பினேன் பார்த்த காலை
நாட்டினிற் பலவாம் மாற்றம்
　　நடந்தன கண்டேன் மெல்லக்
கேட்டனன் இருந்தோர் யாவும்
　　கிளர்ந்தனர் அதிர்ந்தேன் நெஞ்சம்

கன்னல்நேர் மொழியும் நல்ல
　　கயல் நிகர் விழியும் மற்றும்
மின்னல்நேர் இடையும் முத்தாய்
　　விளங்கிடும் பற்க ளோடும்
இன்னல்செய் தனமும் திங்கள்
　　எனத்திகழ் முகமும் கொண்ட
பொன்மணி எங்கே என்றேன்
　　போயினள் அங்கே என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனின் மண்ட பம்போல்
அழகிய பெரிய வீடும்
புருஷனைத் தெய்வ மாகப்
போற்றிடும் எழிலார் பெண்ணும்
உரையினை மதித்தே கேட்கும்
உத்தமச் சேயர் தாமும்
அரிதினிற் பெற்ற பொன்னர்
எங்கென்றேன் அங்கே என்றார்.

அமைச்சரைப் பிடிப்பார் எண்ணும்
அனைத்துமே முடிப்பார் யாதும்
இமைக்குமுன் புரிவார் ஆற்றல்
எனும் சொற்குப் பொருளும் ஆவார்
தமைப்பிறர் வியக்க வாழ்ந்த
தம்பையர் அவர்எங் கென்றேன்
அமைப்பினை யாரோ வெல்வார்
அவரும்தான் அங்கே என்றார்,

அங்கென அவர்கள் சொன்ன
அத்திசை நோக்கல் உற்றேன்
தங்கிய பெருந்தீ இந்தத்
தரையினர் தம்மை நாளும்
பொங்கிய வாயி னுலே
பொசுக்கிடும் இடைத்தைக் கண்டேன்
அங்குளோர் சுடுகா டென்றார்
அதுசொந்தம் எனக்கும் என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு
## வேறு
## உலகம்
### ( குறுங்காவியம் )

மட்டுவிலாம் சிற்றூரை நினைக்கும் காலை
மனஇருளை நீக்குமம்மன் கோவில் தோன்றும்
கட்டமைந்த காளையர்தம் உழைப்பைக் காட்டும்
கவின்மிகுந்த வயற்பரப்பும் அடுத்துத் தோன்றும்
சிட்டர்புகழ் வேற்பிள்ளை யெனும்சான் றோன்போல்
சீர்விளங்கும் சான்றோரின் நினைப்புத் தோன்றும்
எட்டுணையும் வஞ்சமின்றி ஊரில் வாழும்
இன்முகம்கொள் நல்லோரின் நினைப்புத் தோன்றும்.

இயற்கைவளம் பிறவளங்கள் அனைத்தும் சேர
எழில்வீசிக் கொண்டிருக்கும் சிற்றூ ரின்கண்
வயற்புறத்தைக் காவல்செய்யும் ஒருவன் வாழ்ந்தான்
வஞ்சமிலா நெஞ்சுடையான் அவனை யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயத்துடனே சுப்பையர் என்று சொல்வார்
நாணயத்துக் கொருமனிதன் என்றும் குன்ரு
முயற்சியினுல் உயிர்வாழ்வோன் அவன்பெற் றிட்ட
முழுமதியோ சுமதியெனும் எழிற்பேர் கொண்டாள்.

மாங்குயிலின் தீங்குரலோ குழலோ யாழோ
மலர்கள்தரும் நறுந்தேனே அமுதோ பாகோ
தீங்கனியின் சுவைதானே யாதோ என்றே
செப்புதற்கோர் சொல்லின்றித் தவிக்கச் செய்யும்
பாங்கமைந்த குரலுடையாள் வயலி னூடே
பாடியவா றேநடந்தாள் அசைந்தே ஆடும்
பூங்குழலோ கால்கள்வரை நீண்டே அந்த
பொற்றெடியின் வனப்பினிற்கோர் சாட்சி கூறும்.

மின்னலெனும் இடையுடையாள் கலைஞர் யாரும்
விரும்புகின்ற எழிலுடையாள் இனிமை வாய்ந்த
கன்னலெனும் மொழியுடையாள் நாவா லன்றிக்
கயலிரண்டால் கவிபடைக்கும் அழகுப் பாவை
பொன்னுலகம் உள்ளதெனும் உண்மை தன்னைப்
புவித்தலத்தோர்க் குரைக்கவந்த தேவ மாது
செந்நெலெலாம் வளர்ந்திருக்கும் வயலி னூடே
செல்கின்ருள் செல்கின்ருள் வாழ்க அன்னுள்

இயற்கைவளம் நிறைந்திட்ட வயலி னூடே
இன்னுமொரு தனியெழிலாய்க் கன்னி செல்ல
வயற்கரையில் நின்ருேர்கள் கண்கள் எல்லாம்
மங்கைநடந் திடும்அழகில் நிலைத்தே நிற்ப
அயற்புறத்தை நோக்காளாய் அவள்செல் கின்ருள்
ஆயிரமா யிரம்கனவைக் காண்போர்க் காக்கும்
நயத்தையெலாம் கொண்டிருக்கும் இளமை
கொண்டாள்
நல்லுலகை மறந்தவளாய்ப் பாடிச் சென்ருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழிலுடையாள் எழிலுடையாள் என்ப தன்றி
எங்கேயவ் எழிலெனவும் இயம்பல் ஆமோ
விழிதனிலோ நெற்றியிலோ புருவம் மீதோ
வியப்பூட்டும் தனத்திடையோ தோளில் தானே
ஒளியமைந்த பற்களிலோ இதழின் மீதோ
உவப்பூட்டும் இடையினிலோ நடையில் தானே
எழிலுடையாள் எனப்பகுத்துக் கூறற் கில்லை
எவ்விடமும் எழில்விளங்கும் யாக்கை கொண்டாள்.

பருவமொரு வனப்பளிக்க குடும்பம் தந்த
பண்பவட்கோர் அழகளிக்க குறையே யில்லா
உருவமொரு கவின்வழங்க வல்லோன் செய்த
ஓவியம்போல் அவள்திகழ்ந்தாள் இந்நாள் மட்டும்
ஒருதுயரும் அவள்காணுள் தாயின் கையில்
உவந்திருக்கும் சேயெனவே மகிழ்ச்சி கொண்டாள்
வருவதெல்லாம் நல்லனவே என்றே யெண்ணி
வாழ்கின்ற கற்பனைகொள் இளமை கொண்டாள்.

நீரூட்டி நெல்விளைத்தும் செம்மை வாய்ந்த
நிறமலரால் எழில்விளைந்தும் வயலின் கண்ணே
ஊரார்க்குப் பயன் விளைக்கும் குளத்தைக் கண்டாள்
உளம்மகிழ நகைதிகழ குளத்தில் பாய்ந்தாள்
சீரான தாமரையும் அவள்மு கத்தின்
திருமுன்னே நிலைகுலைந்தே அசைதல் கண்டாள்
பேரார்வம் கொண்டவளாய் புட்கள் யாவும்
பெண்ணவளை வாழ்த்திட நீராடல் ஆனுள்.

மங்கையவட் கியற்கையெழில் இருந்த தேனும்
மலர்திகழும் குளத்தினில் நீரா டும்காலை
அங்கமெலாம் புதுப்பொலிவால் சிறப்ப வானில்
ஆதவனே நின்றதனை ரசிக்க லானுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

தங்கநிகர் மேனியினைத் தழுவும் பேற்றைத்
தாமடைந்த காரணத்தால் அலைகள் துள்ளும்
செங்கனிநேர் வாயினிலே முத்தம் தோன்றல்
செகத்தினிலே புதுமையெனப் புட்கள் நோக்கும்.

இருகுடத்தை நிதமேந்தும் எழில்போ தாதென்
றின்னுமொரு குடமெடுத்தும் அதில்நீர் கொண்டும்
ஒருகரத்திற் தாமரையின் மலர்எ டுத்தும்
உள்ளமெலாம் கற்பனைகள் பலவே கொண்டும்
வருவதொரு ரதம்தானே மலர்கள் சேர்ந்தே
மண்ணிடையே கொண்டபுது வடிவோ என்றே
தெரியாராய் அவ்வூரார் திகைத்துப் பின்னர்
தெரிந்ததுவும் சுகம்கேட்டும் மகிழ்ந்தும் செல்வார்

ஊருக்குப் புதியவனாய் மேலை நாட்டின்
உடையதனை அணிந்தவனாய் ஒருவன் வந்தே
பாருக்குள் ஓர்அழகாய்ச் செல்லும் அந்தப்
பாவையினை நோக்கியே சுப்பை யாவாம்
பேருக்கே உரியவர்தம் வீடெங் கென்றே
பெண்ணேநீ இயம்பென்னச் சுமதி தானும்
நேருக்கு நேர்நோக்க இயலா ளாகி
நிலன்நோக்கித் தடுமாறிச் சிறுபோழ் தின்பின்

கையாலே தன்வீட்டைச் சுட்டிக் காட்டிக்
கணப்போதும் நில்லாதே நடக்க லானாள்
பொய்யான இடையினள்பால் நாணம் என்னும்
போற்றரிய நற்பண்பைக் கண்ட அன்னான்
ஒய்யாரக் கொழும்புநகர் மாதர் தம்மை
உவக்காத பண்பெல்லாம் சேர்ந்தே வந்து
மெய்யாகக் கிராமத்தே தஞ்சம் எய்தி
மேன்மைபெற்ற தன்மையினை நினைத்துப் பார்த்தான்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையெழில் மட்டுவிலாம் சிற்றூர் எங்கும்
இருப்பதுபோல் அங்கேவாழ் மகளிர் மீதும்
நயத்துடனே பொலிந்திருப்பக் கண்டான் தான்வாழ்
நகரான கொழும்பிலுள்ள மாதர் செய்யும்
செயற்கையெழில் தனைநினைத்தான் இயற்கை முன்னே
செயற்கையுறும் தோல்வியையும் நினைத்தான் அந்த
வயற்புறத்தே நடப்பதிலே முன்னர்க் காணு
மகிழ்ச்சியையும் சுகத்தினையும் கண்டே சென்றான்.

சிறியதொரு வீடுகண்டான் உழவர் போற்றும்
தெய்வநிகர் ஏர்வீட்டின் முன்னர்க் கண்டான்
பெறுபயனை நோக்காதே காலம் எல்லாம்
பெரும்பயன்செய் எருதினையும் அயலிற் கண்டான்
நறியமணம் செயும்முல்லை வீட்டின் மேலே
நயந்துதுயில் செய்கின்ற சிறப்பும் கண்டான்
கறிதரற்கே பிறப்பெடுத்த பாகற் காய்கள்
கணக்கின்றி வேலியெங்கும் தொங்கக் கண்டான்

வீட்டினிலே திண்ணையிலே தடுக்கின் மீது
விபூதிப் பூச்சிலங்கும் நெற்றி யோடும்
மேட்டினையும் சமமாக்கி நெல்வி ளைக்கும்
வீரத்தைக் காட்டுகின்ற தோளி னோடும்
நாட்டினது நலனுக்காய் உழைத்தும் இந்த
நாட்டினர்க்குத் தெரியாத ஒருவ னாகிப்
பாட்டுவக்கும் பண்பமைந்த சுப்பை யாவாம்
பகரரிய உழைப்பாளி இருந்தான் அங்கே.

புதியவனைச் சுப்பையா நிமிர்ந்து பார்த்தே
புன்சிரிப்பி னோடும்''தம்பி வாரும்'' என்றே
எதிரிலுள்ள தடுக்கதனைக் கண்ணுற் காட்ட
இருந்திட்டான் புதியவன்பின் சுப்பை யாவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதிதன்னை அறிகின்ற நோக்கி னோடும்
" ஆர்தம்பி விளங்கவில்லை " என்றே கேட்ப
மதிமிகுந்த அவ்விளைஞன் அவனை நோக்கி
மலர்ந்தமுகம் பொலிந்திலங்கக் கூற லானான்.

"வீரசிங்கம் என்பவரின் மைந்தன் ஆவேன்
விளைகின்ற நம்வயலைப் பார்ப்ப தற்கு
நேரில்வர இயலாத கார ணத்தால்
நேற்றென்னை ரயில்மூலம் அனுப்பி வைத்தார்
சீரமைந்த நம்வயலைக் காப்ப தான
சிறப்புமக்குச் சொந்தமென்றும் அவரே சொன்னார்
பேரெழிலே விளங்குகின்ற இவ்வூர்க் காணும்
பெருந்தவத்தின் பயன்இன்றே எய்தப் பெற்றேன் "

என்றந்தப் புதியவனோ உரைத்துப் பின்னர்
எனதுபெயர் சுந்தரனே என்றும் சொன்னான்
நன்றுங்கள் வருகையென்று சுப்பை யாவும்
நவில்கையிலே சுமதிசற்றுத் தொலைவில் நின்றாள்
நின்றவளை அவள்எனக்குப் புதல்வி என்றே
நெஞ்சுவந்து சுப்பையர் கூறும் காலை
அன்றகத்தே இடம்பிடித்த ஓவி யத்தை
அடுத்துமொரு முறைபுதியோன் படம்பி டித்தான்.

வயல்முழுதும் பார்ப்பதற்கு நாளைக் காலை
வந்திடுவேன் இன்றிரவை யாழ்ப்பா ணத்தின்
அயல்விளங்கும் நண்பனது வீட்டிற் போக்கும்
அகமுடையேன் என்றவனும் கூறும் வேளை
தயைவிளங்கும் செல்வந்தர் வீர சிங்கம்
தம்சுகமும் பிறர்சுகமும் வினவிப் பின்னர்
நயம்விளங்கும் சுப்பையா என்னும் நல்லோன்
நல்லபசும் பால்பருகக் கொடுத்திட் டானல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம்பின் விடைபெற்றுன் அவன்ம னத்தே
சுமதிஎன்பாள் இடம்பெற்றுள் அஃதே போற்றுன்
அந்தஎழிற் பாவையினுள் அகத்தி லேயும்
ஆணழகன் இடம்பெற்றுன் காதல் என்ற
பந்தநிலை இவ்விருவர் தம்பா லேயும்
படிந்தநிலை உற்றதுவே இளம்உள் ளங்கள்
சொந்தமுறப் பலகாலம் தேவை இல்லை
சொல்லுங்கால் கணப்பொழுதே போதும் அன்றே.

## வேறு

சுந்தரத்தின் உயிர்நண்பன் ஆனந்தன்
எனும்கவிஞன் தொன்மை வாய்ந்த
செந்தமிழின் இலக்கியமும் நிகழ்கால
இலக்கியமும் தேர்ந்தோன் முன்னோர்
சொந்தமென அவற்குவைத்த பெருஞ்செல்வம்
இருந்தமையால் தொழில்தே டாதே
பைந்தமிழைப் படிப்பதையும் கவிதைபல
படைப்பதையும் தொழிலாய்க் கொண்டான்.

நகைச்சுவைசேர் சொற்களினுல் நண்பர்தமைக்
கவர்கின்ற நயம்வாய்ந் திட்டோன்
பகைத்திடுவோர் தம்மையுமே சிலநாளிற்
பண்புகொண்டே மாற்றும் வல்லோன்
மிகச்சிறந்த அன்புளத்தான் சிற்றெறும்பை
மிதிப்பதற்கும் விருப்பம் கொள்ளான்
முகத்தேயும் அகத்தேயும் சினமென்னும்
தீப்பரவா மலர்ச்சி பெற்றுன்.

ஆனந்தன் சுந்தரனை மகிழ்ச்சியுடன்
வரவேற்றே ஆர்வம் காட்டித்
தேனென்ன என்நண்பா நின்வரவால்
இன்றையநாள் சிறந்த தென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானன்புக் கரம்கொண்டே சிற்றுண்டி
கொடுத்திட்டான் மகிழ்ந்தான் நண்பன்
நானொன்று சொல்கின்றேன் பொறுமையுடன்
கேளென்றே நவிலல் உற்றான்.

## வேறு

சித்தி ரம்பல கண்டனன் வல்லுநர்
செய்த சிற்பங்கள் பற்பல கண்டனன்
முத்தி னோடு பவளமும் கண்டனன்
முழுநி லாவினை வானிடைக் கண்டனன்
கத்து கின்ற குயில்ஒலி கேட்டனன்
கனிவு செய்திடும் வேய்ங்குழல் கேட்டனன்
இத்து ணைப்பொருள் சேரினும் தோற்றிடா
தெதிரில் நின்றிடும் ஓர்பொருள் கண்டனன்.

மங்கை யென்றொரு பேரினில் இப்புவி
வான மாதினை ஏற்றுள தென்பனோ
சங்கும் திங்களும் கெண்டையும் தாமரை
தந்த மொட்டும் கலந்துள வென்பனோ
அங்கை தன்னைஎன் கையினிற் சேர்த்திட
ஆவல் கொண்டதோர் பாவையே என்பனோ
இங்கு யாதெனக் கூறுவன் நண்பனே
இதய எண்ணங்கள் நாவில் அடங்குமோ.

என்ன சொல்லி உரைப்பன் அவள்எழில்
என்ற போதையில் என்னை இழந்தனன்
முன்ன ரும்பல்பி றப்பினி லேஅவள்
முழுமை வாய்ந்த சுகங்கள் அளித்தெனைப்
பொன்னி னும்பெரி தாக நினைத்துமே
போற்றி ஏற்றி இருந்திருப் பாள்கொலோ
கன்னல் நேர்பவள் இந்தப் பிறப்பிலும்
கணவ னாய்எனை ஏற்று மகிழ்வளோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை மட்டுவில் நான்செலும் காலையில்
நண்ப நீயுமே வந்திடு வாயென
ஆளை வென்றிடும் ஆசை அலைத்திட
அன்பு நண்பன்தன் நண்பற் குரைத்தனன்
வேளை யோடுநாம் மட்டுவில் செல்லுவோம்
விரும்பும் பாவையைக் காணுவன் என்றுபின்
நீளப் பேசிய பின்னர் இருவரும்
நித்தி ரைக்குப் படுக்கை அடைந்தனர்.

## வேறு

சுந்தரம் கனவில் வந்தனள் சுமதி
பூமலர் வதுபோற் தேமலர் சிரித்தனள்
வாவெனச் சுந்தரன் மகிழ்வுடன் அழைத்தனன்
தாவியே அணைத்துத் தான்மகிழ் வெய்தினன்
செவ்விதழ் என்ற கொவ்வையை நாடிச்
செவ்விதிற் சுவைத்தும் தேன்சுவை கண்டும்
கூந்தல் என்ற பாந்தளை நீவியும்
காந்தள் பற்றியும் கன்னமே ஒற்றியும்
கொங்கை என்ற கோங்கரும் பினிலே
தங்கும் இன்பம் தான்மிக நுகர்ந்தும்
மங்கை மேனியில் வாலிப உணர்வுகள்
பொங்கச் செய்தும் பொலியச் செய்தும்
மதிமுகம் தன்னில் தன்முகம் மேவியும்
அதிசய முத்தம் ஆயிரம் கொடுத்தும்
கைவல் சிற்பி கவினுறச் செய்த
மெய்யெழிற் சிற்பம் ஈதென வியந்தும்
நிலவினில் மயங்கிய கலைஞனே போன்றும்
மலரினில் மயங்கிய தும்பியே போன்றும்
அழகெலாம் திரண்ட ஆயிழை மேனியின்
வளமெலாம் ரசிக்கும் ரசிகனே ஆகியும்
அந்த இரவை அமுதுநேர் கனவினிற்
களித்தும் கழித்தனன் சுந்தரன் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

கயற்கண் மாதவள் காட்சிகள் மட்டுமா
கனவு தானும் இனிக்குமென் றெண்ணியே
மயக்கும் அந்த மலர்முகம் காணுமோர்
வாஞ்சை உந்த எழுந்திட்ட சுந்தரன்
இயற்கை நல்கும் அழகுகள் யாவையும்
ஏற்று நின்றிடும் மட்டுவில் ஊரினை
நயம்கொள் ஆனந்த நண்பன் துணையொடும்
நாடிச் சுப்பையர் நன்மனை யெய்தினன்.

ஆனந் தன்அவள் பேரெழில் கண்டனன்
அருமை நண்பற் கிவள்துணை ஆயிடின்
வானின் நன்மைகள் மண்ணிடைக் காணுவான்
மனத்தில் நிம்மதி என்றுமே எய்துவான்
கானம் செய்திடும் இக்குயில் ஓசையில்
காலம் முற்றுமே தன்னை மறப்பனால்
ஞானம் மிக்கவர் நல்லெழில் மிக்கவர்
நன்று சேர்ந்திவர் வாழ்கென வாழ்த்தினன்.

தந்தை உள்ளன ரோஎனத் தேன்மொழி
சற்று நேரத்தில் வந்திடு வார்என
வந்த தும்நம் வரவினைக் கூறென
வழுத்திச் சுந்தரன் ஆனந்தன் தன்னொடு
அந்த நல்லெழில் வளவினுக் குச்சிறி
தப்பு றத்தினில் நின்றுரை யாடினர்
சுந்த ரன்செய் தவத்தினை ஆனந்தன்
சொல்லிச் சொல்லிநல் வாழ்த்துக்கள் கூறினன்

## வேறு

அந்த நேரம் அவ்விடம் நோக்கி
வந்த சுப்பையர் மகிழ்வுடன் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற் கழைத்துச் சென்றனர் அவர்கள்
பேசிக் கொண்டே இருக்கும் வேளை
சுமதி மோரினைக் கொணர்ந்தனள் பேணியில்
ஆனந்த னுக்குக் கொடுத்துப் பின்னர்
சுந்தர னிடத்துத் தோகை கொடுக்கையில்
சுந்தர னுடைய வாலிபக் கைதான்
பேணியின் உடனே மலர்க்கரம் பற்றலும்
நாணிய சுமதி பேணிகை விடுதலும்
மோரவண் சிந்தலும் மகளே கவனம்
என்றுசுப் பையர் சொல்லிடச் சுமதி
மன்னித் திடுங்கள் வேறோர் பேணியிற்
கொணர்வேன் என்று விரைந்தனள் உடனே
சுமதி சுந்தரன் என்னும் இருவரும்
கொண்ட அன்பின் திண்மையை அறிந்து
வாழ்க வாழ்க இவர்கா தலென
அகத்தின் கண்ணே ஆனந்தன் வாழ்த்தினன்
நீண்ட நேர உரையா டலின்பின்
மீண்டனர் இருவரும் மட்டுவில் விட்டே.

* * *

தந்தையின் முன்னர்ச் சென்ற சுந்தரன்
மட்டுவிற் பயணம் வெற்றியே என்றனன்
வீர சிங்கம் அம்மொழி கேட்டே
எதிலும் சமர்த்தன் நீஎன உரைத்தே
முதுகில் தட்டி மகிழ்ச்சியைக் காட்டிப்
பயணக் களைப்பாய் இருக்கிறாய் ஆதலின்
ஓய்வு கொள்வாய் என்றே மொழிந்தனர்
சுந்தரன் அப்பாற் செல்லான் ஆகி
அப்பா ஒருபொருள் வேண்டும் என்றனன்
என்றதும் மகனே ஏன்வீண் தயக்கம்
பன்னுக இன்றே வாங்கலாம் அதனைச்
சென்ற மாதம் ஸ்கூட்டர் கேட்டாய்
வாங்கித் தந்தேன் இந்த வாரம்
கார்கேட் கின்றாய் போல்தெரி கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீஒரு வன்தான் என்னரும் செல்வம்
தாயிலா உனக்குத் தாயும் நானே
தனியனும் உனக்குச் சகோதரன் நானே
ஆதலால் மகனே எதுதான் வேண்டினும்
தயங்கா தென்னைக் கேட்டலே தகும்காண்
கார்தான் வேண்டினும் புறப்படு செல்வோம்''
என்றே தந்தை கூறிடச் சுந்தரன்
'' அழகெலாம் விளங்கும் மட்டுவில் ஊரில்
அழகிய சிற்பம் உயிருடன் கண்டனன்
அந்த உயிரும் என்றன் உயிரும்
ஒன்று யினஎன் தந்தையே '' என்றனன்
கேட்ட தந்தை கிளர்சினம் கொண்டே
'' உணர்ந்தனன் உண்மை நிறுத்துக பேச்சை
எங்கள் குடும்ப கௌரவம் ஈதெனச்
சிறுபயல் நீதான் அறிந்திடல் ஆமோ
கௌரவம் என்ற ஒன்றினைக் காக்க
நம்முன் னோர்கள் பன்முறை பன்முறை
தங்கள் சொந்த ஆசையைத் துறந்தனர்
விளக்கம் வேண்டாம் நீயுநின் ஆசையைத்
துறத்தல் வேண்டும் இன்றெனில் நானோ
ஆவியைத் துறப்பேன் அதுதான் முடிபாம் ''
என்று கூறி விரைந்தனர் அப்பால்
பேரெழிற் பரிதியின் ஒளியினில் நின்றோன்
காரிருட் குகையினுள் வீழ்ந்தமை ஒப்ப
சிறிது நேரம் எதும்அறி யானாய்
அவ்விடத் தேயே நின்றனன் சுந்தரன்
இளமைச் சோலையின் கற்பனை மலர்கள்
பழமைக் காற்றால் உதிர்ந்தன நிலத்தே
ஒருநாள் முற்றும் திகைத்த சுந்தரன்
மறுநாள் சுமதிக் கெழுதினன் கடிதம்



155693
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

"அன்பேஎன் ஆருயிரே அமுதே தேனே
அழகனைத்தும் திரண்டெழுந்த இனிய பாவாய்
சொன்னாலோ நீபொறுக்கும் செய்தி அன்று
சொல்லாமல் விடுவதற்கும் மார்க்கம் இல்லை
உன்னாவி என்னிடத்தும் என்றன் ஆவி
உன்னிடத்தும் உள்ளதுவாம் உண்மை தன்னை
என்னாலோ பிறராலோ தந்தை யார்க்கே
எடுத்துரைக்கும் வலிமைதான் சிறிதும் இல்லை

அடியவனின் நினைப்பினிலே தெய்வம் அன்றி
ஆருயிரே வேறுபொருள் வருதல் உண்டோ
கொடிமலரே என்மனத்தும் நீயே அன்றிக்
குலப்புகழோ குவைப்பொன்னோ வருதல் உண்டோ
துடிதுடிக்கும் என்னெஞ்சை நின்றன் நெஞ்சம்
சொல்லாதே உணரும்அதில் ஐயம் உண்டோ
கொடுவினையோ வேறெதுவோ என்றன் நெஞ்சைக்
கோகிலமே என்றந்தை அறிந்தார் இல்லை.

கண்டதும்உன் உடலினிலே காதல் கொண்டேன்
கதைத்ததும்உன் குரலினிலே ஆவல் கொண்டேன்
பண்டிருந்த நினைப்பெல்லாம் மறந்து விட்டேன்
பாரினிலே ஓர்கணத்துப் பழக்கத் தோடே
கண்டுநிகர் மொழியினளே உடலி னோடு
காதலித்தேன் உன்னுயிரைத் தானும் நானே
விண்டுரைக்க முடியாத என்றன் அன்பை
விளக்குவது தெய்வத்தை விளக்கல் போலும்

செம்பவழ இதழ்களினைச் சுவைப்ப தற்கும்
செவ்விளநீ ரினில்தாகம் தனைத்தீர்த் தற்கும்
சங்குவளைக் கரமெடுத்து மெல்லக் கன்னம்
தனில்ஒற்றி மலர்மென்மை தனைக்காண் டற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குலெது பகலேது என்ற பேதம்
காணாது புதுஉலகம் தனைக்காண் டற்கும்
இங்குதவம் சிறிதேனும் புரிந்தி டாத
ஏழையேன் தன்னைநீ மன்னிப் பாயோ.

கிள்ளையினம் ஒன்றையொன்று கொஞ்சக் கண்டு
கிளக்கரும்நின் முகத்தினிலே நாணம் மேவும்
கொள்ளையின்பக் காட்சியினைக் காண்ப தற்கும்
கோதையே நீசிரித்துக் கொள்ளும் வேளை
உள்ளமதைக் கவர்கின்ற பூமொட் டுக்கள்
ஒருங்கசைந்து செயும்இன்பம் தனைக்காண் டற்கும்
எள்ளளவும் தவம்புரியா ஏழை யேனை
எவ்விதம்நீ மன்னித்துக் கொள்ளு வாயோ.

காந்தளெனும் உன்கரத்தால் அன்பும் சேர்த்தே
கண்ணேநீ ஊட்டுகின்ற உணவு தன்னை
மாந்துதற்கும் அருகிருந்து நீஅப் போது
மனதாரச் சொலும்இனிய சொற்கேட் டற்கும்
சாந்தமுறும் உன்மேனி என்ற யாழைத்
தரையினிலே காலமெலாம் தான்மீட் டற்கும்
ஏந்திழையே சிறுதவமும் புரிந்தி டாத
இவ்வேழை தன்னைநீ மன்னிப் பாயோ?

ஆண்டுபல நான்மண்மேல் வாழ்ந்திட் டாலும்
அடுத்தகண மேதான்நான் இறந்திட் டாலும்
ஈண்டெனது இதயமெனும் கோயிற் கண்ணே
இருக்கின்ற ஒருதெய்வம் நீயே கண்ணே
வேண்டுகின்ற பொருளனைத்தும் நீஇங் கின்றேல்
வேண்டாத பொருள்களென அறிவாய் பாவாய்
தூண்டிவரும் துயரத்தை என்றன் ஆவி
சுமந்திடுநாள் எத்தனைநாள் அறியேன் தேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் நாம்மணந்தால் சாவ தான
தம்முடிபைத் தளர்த்தாமற் கூறி விட்டார்
தந்தைதனைக் கொன்றவன்நான் என்ற பாவம்
தரையினிலே வந்தென்னை எய்தா வண்ணம்
இந்தநாட் டினைவிட்டே வெளிநாட் டிற்கே
ஏகின்றேன் தந்தைமொழி ஏற்றுக் கொண்டேன்
செந்தமிழே திருவிளக்கே குறிஞ்சிப் பூவே
நீயேனை மன்னித்துக் கொள்ளு வாயோ ?''

★ ★ ★

## வேறு

அம்மா கடிதம் உனக்கென ஊழியன்
கூறக் கேட்டே விரைந்தனள் சுமதி
சுந்தரன் கடிதம் அதுஎன் பதனைப்
பிரிக்கு முன்னரே தெரிந்தனள் அவளே
ஏனோ அவளின் கைகள் நடுங்கின
அறையினுட் சென்றே ஆவலி னோடும்
மிகவிரை வாகப் பிரித்தே பார்த்தனள்
ஒவ்வொரு வரியும் கற்பனைச் சோலையை
அரியும் வாளாய் அமைந்தது கண்டனள்
ஒவ்வொரு வரியும் ஆசையாம் விளக்கை
அணைக்கும் புயலாய் வீசுதல் கண்டனள்
ஒவ்வொரு வரியும் வாழ்வெனும் கோட்டையைத்
தகர்க்கும் குண்டாய் அமைந்தமை கண்டனள்
ஒவ்வொரு வரியும் அகமெனும் குளத்தினைக்
கலக்கும் கல்லாய் வீழ்ந்தமை கண்டனள்
தலையெலாம் கனத்திடக் கண்கள் கலங்கின
முகமெலாம் வியர்ப்ப இருதயம் முன்னிலும்
பன்மடங் காக அடித்திட அந்தப்
பாவை தரையினில் வீழ்ந்து கிடந்தனள்
வயற்புறம் சென்று வந்தசுப் பையர்
புதல்வி வீழ்ந்து கிடந்தமை கண்டனர்
விரைந்து தண்ணீர் கொணர்ந்து முகத்தினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்துப் பின்னர் அருகினிற் கிடந்த
கடிதம் தன்னை எடுத்துப் படித்தனர்
கண்களைத் திறந்த சுமதியைப் பார்த்தே
இன்சொற் களையே ஆய்ந்தாய்ந் தெடுத்து
" மகளே சுமதீ வருந்துதல் தவிர்ப்பாய்
ஒருபெரும் உண்மையை உணர்ந்துநீ கொள்வாய்
ஏழையர் செல்வர் எனும்இரு பிரிவில்
இருவே றுலகம் இருந்திடல் காண்பாய்
உணர்ச்சி நிலையில் தோன்றிய சிக்கலை
அறிவு நிலையில் அகற்றுதல் வேண்டும்
இன்றுநேற் றன்று பல்லாண் டாகக்
குன்றுநேர் செல்வரும் குனிந்திடும் வறியரும்
இருப்பவே வையம் இயங்குதல் காண்பாய்
இருவே றுலகம் இருவே றுலகம்
இதனை மறந்தால் இல்லையே நிம்மதி
பணம்உடை யோர்கள் பணம்இலார் தம்மை
கணமும் மதித்தல் கண்டதும் உண்டோ
குன்றுவாழ் பறவை குன்றினிற் பிரிந்தே
சென்றுமண் புழுவின் நட்பினை ஏற்குமோ
வறியரை வறியரும் செல்வரைச் செல்வரும்
உறவெனக் கொள்ளல் உலகிடைப் பொருந்தும்
வறியவர் செல்வரை உறவெனக் கொள்ளல்
அறியாச் செய்கை அன்றிவே றில்லை
திருவுடை உலகம் ஒன்றுமற் றொன்றே
பஞ்சமும் பசியும் கொஞ்சிடும் உலகம்
காதல் என்பதுவும் ஒற்றுமை என்பதும்
சமமாய்ப் பழகிடும் சால்புதான் எனினும்
இருஉல கிற்கும் இடையே தோன்றல்
இல்லை இல்லை உணர்க என்மகளே
கற்றவன் தன்னைக் கற்றவன் விழைதலும்
செல்வன் தன்னைச் செல்வனே விழைதலும்
புதுவதன்று புரிந்து கொள் மகளே



6991CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொரு நாள்நான் யாழ்நகர் சென்றேன்
வீதியைப் பெருக்கும் ஓர்தொழி லாளி
கடமையைக் கருத்துடன் செய்துகொண் டிருந்தனன்
அந்த வேளை அவ்வழி யாக
வந்ததே மிகப்பெரும் செல்வனின் ஒருகார்
நேர்மை மிக்க அத்தொழி லாளி
காரின் வரவைக் கவனித் தானிலன்
வீதி ஓரம் நின்றவன் தன்னை
மோதி அப்பால் சென்றது கார்தான்
குருதிவெள் ளத்தே கிடந்தஅவ் வேழையை
மருத்துவ மனையிற் சேர்த்திடற் காக
வந்த கார்களை மறித்தேன் அவர்தம்
சிந்தை சிறிதும் இரங்கிட வில்லை
''காரில்'' ஏற்றின் காரினில் இரத்தம்
சிந்தும் என்றவர் எண்ணினர் போலும்
ஏழையின் உயிரைத் துரும்பினும் கீழாய்
எண்ணிய கார்கள் விரைந்திடும் வேளை
கடைகள் தோறும் பொருள்களை ஏற்றி
இறக்கும் வண்டிக் காரன் வந்தனன்
குருதி வெள்ளத்திற் கிடந்தவன் நிலைக்குப்
பெரிதும் வருந்திக் கலங்கினன் கண்கள்
வண்டியில் ஏழையைத் தூக்கி ஏற்றிட
நானும் சேர்ந்து துணைபுரிந் திட்டேன்
எவ்விதக் கூலியும் நோக்கான் ஆகி
காயக் காரனை மருத்துவ மனையில்
நேயத் துடனே சேர்த்தனன் அவனே
ஏழைக் கிரங்கும் ஏழையே என்பதை
நூல்களிற் கண்டோம் வாழ்விலும் கண்டோம்
கடிதம் முற்றும் நான்படித் திட்டேன்
கவலையை விடுவாய் என்னரும் மகளே
திலக வதியார் பற்றியோர் கட்டுரை
எழுத வேண்டுமாம் அயன்மனைச் சிறுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கென அங்கே காத்திருக் கின்றாள் ''
என்று சுப்பையர் கூறியே செல்லலும்
சுமதி அந்தச் சிறுமியை அழைத்தே
திலக வதியார் பெருமையைக் கூறினள்
கலிப்பகை என்ற ஒரு பெரும் வீரனை
கணவனாய்க் கொள்ளும் நினைப்பினில் இருக்கையில்
போரினில் அந்த வீரனோ இறந்தனன்
செய்தி கேட்டுத் தம்முயிர் மாய்த்திடத்
திலக வதியார் எண்ணிய வேளையில்
தம்பி யாரைப் பார்த்திடும் கடமை
தடுத்ததே இறக்கும் முடிவினின் றவரை
ஆண்டவன் நோக்கப் படியே அனைத்தும்
நடந்திடும் என்றே எண்ணிய அவரோ
தூண்டிய துயரைத் தொலைத்தனர் ஆகித்
தம்பியைப் பார்த்தனர், தம்பியார் சமணம்
நன்றெனத் தமக்கையைப் பிரிந்தே ஏகினர்
அந்த வேளை அல்லல் எய்தாமல்
சிந்தையாற் கருணைச் சிவனையே வணங்கித்
தம்பி யாரை மீட்டனர் சயணரின்
எங்கள் நோக்கின் படிவா ழாதே
தெய்வ நோக்கின் படியே வாழ்ந்தால்
இல்லைத் துன்பம் இதுவே வாழ்வெனச்
சொல்லினள் சுமதி பக்தியில் திளைத்தே.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் சிந்தும் செம்மலர்கள்

மெல்லக் காலை மலர்ந்து துணைவியின்
செல்லச் சிரிப்பை மொழிந்தது முன்றிலில்
நின்ற பூஞ்செடி நோக்கினன் ரோஜா!
ஒன்றில் அரும்பு முகிழ்த்தமை கண்டனன்
கிளியின் வாயிடைக் இளக்கரும் நாக்கென
ஒளிசெய் ததுவே! செடியின் அரும்பு
இன்னும் சிலநாள் சென்றதன் பின்னர்
துன்னி நோக்கினன் துகள்தீர் அரும்பு
கோழிச் சேவலின் கொண்டையை ஒப்ப
பெருத்து நின்று பேரெழில் செய்தது!
இடையே பகல்சில ஏகிய பின்னர்
அடடா! நோக்கினன் அச்செடிக் கண்ணே
பனிநீ ரினிலே நனிநீ ராடிப்
''பார்நான் பருவ மலரென'' ரோசா
மெல்லச் சிரித்ததும் மேவரும் மகிழ்வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை மறந்தேன் எழில்மிகு வண்டின்
வடிவம் பெற்றேன் மலர்க்கண் விரைந்தேன்
புதிதாய்ப் பூத்த பூவை நோக்கினேன்
ஆவலைத் தேனாய் அதுஎனக் களித்தலும்
பருகி அதன்மேல் தங்கினேன் என்னுளம்
உருகும் தன்மை உணர்ந்தனள் மனைவி
"என்ன சிந்தனை" என்றுதோள் பற்றினாள்
பின்னர் மனித வடிவம் பெற்றேன்
மற்றுமோர் ரோசா என்பது தெரிந்தே
பற்றினேன் தேனைப் பருகெனத் தந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துக்கு மறுநாள்

திருமண எழுத்து நேற்றுச்
சிறப்புடன் நடந்த தென்றூர்
பெருமகிழ் வுடனே வீட்டோர்
பேசினர் அதனைப் பற்றி
மருமகன் இன்று மாலை
வருவதைக் கண்ட மாமி
பெரியதோர் கதிரை வைத்தே
பெண்ணுக்குச் சேதி சொன்னாள்.

சேதியைக் கேட்ட பெண்ணாள்
திருமுகம் கழுவிப் பின்னர்
சோதிசேர் முகத்தில் எல்லாம்
''பொன்ட்ஸி''னை அள்ளிப் பூசி
வீதியில் நேற்றெ டுத்த
மென்பட்டை உடுத்துக் கொண்டு
காதலன் தன்னைக் காணக்
கருத்துடன் சென்றாள் அங்கே:

மலிவாக விற்ப தான
வண்ணங்கொள் பிஸ்கட் பக்கெற்
பொலிவாகக் கொணர்ந்த பிள்ளை
புன்சிரிப் புடன்இ ருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிபோல ஒதுங்கி வந்த
ஏந்திழை வெட்கத் தாலே
புலிபோல நின்றான் தன்னைப்
பார்த்தற்கே இயலா ளானாள்.

மேசையை ஒருக்காற் பார்த்தாள்
விளங்குஞ்சா ளரத்தைப் பார்த்தாள்
ஆசையை அவன்மேல் வைத்தும்
அவன்முகம் பார்க்க நாணி
ஓசையே சிறிதும் இன்றி
ஒளிஉடல் நடுக்கம் கொள்ள
பாஷைகள் பலவே கற்றும்
பாவையோ ஊமை யானாள்.

மாப்பிள்ளை கொழும்புத் தம்பி
மண்ணிடை நாணு வானோ
பூப்போன்ற பெண்ணி னாளைப்
புதுப்புதுக் கேள்வி கேட்டான்
காப்பிட்ட கையி னாளும்
காவல்செய் நாணம் தன்னைத்
தூக்கியே எறிந்து விட்டுத்
துணைவனை நிமிர்ந்து பார்த்தாள்.

தூரத்தே நின்றோர் மெல்லத்
தூரத்தைக் குறைக்க லானார்
நேரத்தின் அருமை பற்றி
நெஞ்சுளே புரிந்து கொண்டே
ஓரக்கண் பார்வை விட்டே
உவந்துகை தீண்ட லுற்றார்
பாரெலாம் எழுத்தின் பின்னர்
பெறும்பயன் அவரும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார வெட்டும்
## சம்சார சோகமும்

காதலர் இருவர் தங்கள்
        கருத்தெலாம் ஒன்று பட்டே
ஆதர வெய்தும் காலை
        அங்குமின் சாரம் நின்றால்
சாதகம் ஆகும் என்றே
        தாமவர் மகிழ்ந்து கொள்வார்
பாதகம் மற்றோர்க் கெல்லாம்
        பகர்கிறேன் கேட்டுக் கொள்ளும்.

திரைப்படம் பார்க்கும் போது
        திடீரெனக் "கறண்டு" நின்றால்
இருப்பவர் சும்மா அங்கே
        இருப்பரோ துன்பம் அன்றோ
தெருத்தனில் நகைப்பெண் செல்லத்
        திடீரெனக் "கறண்டு" நின்றால்
இருப்பரோ திருடர் சும்மா
        இதனையும் நோக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது முகூர்த்தம் என்றே
மணமகன் தாலி கட்டும்
சிந்தையால் எழுந்த போது
திடீரெனக் ''கறண்டு'' நிற்க
அந்தரப் பட்டே ஈற்றில்
அவள்கையிற் கட்டி விட்ட
விந்தைகள் தம்மைக் கண்டோம்
மின்சார வெட்டி னாலே.

பானையில் அரிசி வெந்த
பாதியில் இருக்கும் போதும்
சீனிகொள் போத்திற் பக்கம்
சிறுவர்கள் நிற்கும் போதும்
பூனைகள் பாலின் பக்கம்
பூரித்தே நிற்கும் போதும்
ஏனிந்தக் ''கறண்டு'' நிற்கும்
என்றுசம் சாரம் கேட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாணும் பாவையும்

பாணுக்குக் கியூவினிலே நின்ற பாவை
பசிமிகவும் வாட்டிடவே மெல்ல ரோட்டுக்
கானுக்குள் விழுந்திட்டாள் மயக்கம்
கொண்டாள்
கண்டோர்கள் விரைந்தோடி அங்கே நின்ற
வானுக்குள் ஏற்றியே அரசாங் கத்தின்
மருத்துவசா லேதனிலே விட்டார் டாக்டர்
பாணுக்கு நின்றவளைப் பரிசோ தித்துப்
பக்குவமாய் ஊசிஒன்று போட்டுச் சென்றார்.

வாடியதேயர் முகத்தினிலே தெளிவு தோன்ற
மயங்கியதோர் நிலைநீங்க அந்தப் பாவை
தேடிநின்றாள் எதனையோ அங்கும் இங்கும்
தெரியாதோர் என்னவென அறிதல் வேண்டி
வீடதனில் தவழ்கின்ற அன்புச் சேயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினையோ காண்பதற்கே இல்லை யானுல்
பிடமைந்த கணவனைத்தான் காண் பதற்கே
பெருவிருப்பம் கொண்டனையோ சொல்வாய்
என்ருர்

இல்லையென எதற்கும்கை அசைத்த பாவை
ஈற்றினிலே மெல்லத்தன் வாய்தி றந்தே
சொல்லலுற்ருள் ''என்பாணைக் கொணர்க''
வென்றே
சூழ்ந்துநின்ருேர் ஓடோடிக் கடைக்குச்
சென்றே
அல்லலுற்றுப் பாண்கொணர்ந்தார்
அதனைக் கண்டாள்
ஆவென்ருள் பாணதனை அணைத்துக்
கொண்டாள்
செல்லலுற்ற தவள்ஆவி ஆமாம் பாணைச்
செத்தபின்னும் அவள்கைகள் விடவே இல்லை.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவைத் தேடி

தோசைக்கும் பிட்டி னுக்கும்
சுவைதரும் ரொட்டி கட்கும்
ஆசையை வளர்ப்ப வான
அநேகமாம் உண்டி கட்கும்
பேசரும் மூலமான
பிறநாட்டு மாவே உன்னை
நேசமாய்த் தேடு கின்றேன்
நீஎங்கே இருக்கின் றாயோ.

நீவர வில்லை என்ற
நித்திய துயரத் தாலே
நாவினைக் கவரும் பாணும்
நாலவுன்ஸ் மெலியக் கண்டேன்
தேவரும் விரும்பும் பிட்டும்
ரொட்டியும் தேய்ந்து தேய்ந்து
போவதை அறிந்தும் மாவே
போயினை எங்கே நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமா வந்தாய் இல்லை
இளகுமா உந்தன் சிந்தை
உண்ணுமா குழந்தை தானும்
உன்வர வில்லை யாதல்
எண்ணுமா உன்னை அன்றி
இன்னுமோர் உணவை நெஞ்சம்
பண்ணுமா பலகா ரங்கள்
பலவுமா விளங்கு மாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின்
## மோட்டார் வண்டி

அதிபரின் மோட்டார் வண்டி
அதுபுது உலகம் ஆகும்
புது வித ஒலியைச் செய்யும்
புகையினுல் இருளை ஆக்கும்
எதுவிதச் செலவும் இன்றி
இருபதின் மேலாம் ஆண்டாய்
அதிபர்க்கே மாடாய் நாயாய்
உழைத்திடும் அதைக்காண் இன்றும்

பள்ளிவிட் டதுமே அந்தப்
பழையமோட் டாரைச் சேர்ந்தே
தள்ளமா ணவர்கள் நிற்பர்
தள்ளியே விடும் சேர்ப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளரும் விலையில் பெற்றேல்
கொடும்விலை விற்றிட் டாலும்
தள்ள ஆள் இருப்ப தாலே
தனித்துயர் அவரோ கொள்ளார்.

அதிபரின் மோட்டார் வண்டி
அதிட்டத்துச் சிறந்த தாகும்
அதுவந்த பின்னர் தானும்
அவர்மணம் நிகழ்ந்த தென்பார்
அதிபராய் உயர்ந்தார் என்றால்
அதும்அதன் அதிட்டம் தானும்
அதுமோதிப் பிறவி நீங்கி
அடைந்தனர் முத்தி பல்லோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# அரிசியும் சந்நியாசியும்

" இவ்வுலகம் பொய் இதிலே இருப்போ ரும்பொய்
இருப்பவர்கள் கூறுகின்ற அனைத்து மேபொய்
அவ்வுலகம் செலல்வேண்டும் " என்றே கூறி
அயல் வீட்டுச் சின்னப்பர் துறவு பூண்டார்
செவ்வியநற் றலமனைத்தும் செல்லல் வேண்டும்
என்றதுவோர் சிந்தையினுல் விரைந்த போதில்
இவ்வுலகம் சேமமுறும் சேதி ஒன்றை
இரு செவியால் அவர்கேட்டார் நின்ருர் அங்கே.

" கூப்பனுக்கோ ஒருருத்தல் அரிசி மேலும்
கொடுப்பார்கள் ஆட்சியினர் " என்ற சேதி
வாய்ப்பன்என அவர்செவியில் இனித்த போதில்
மகிழ்ந்திட்டார் காவியினைக் களைந்தே வீசிக்
கூப்பனதை எடுத்திட்டார் கடையை நாடிக்
குடுகுடென ஓடிப்போய் 'கியூ'வில் நின்றே
"மாப்பயனைத் தருகின்ற கடையே நீடு
வாழ்க" வெனக் கடையதனை வாழ்த்தலானுர்.

6991CC



155693

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அட்டை அச்சுப்பதிவு: திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org